மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பரிசு கொடுக்கிற காரணத்தினால் வயது முதிர்ந்தவர்கள்தான், வயது குறைந்தவர்களாகச் சொல்லிக்கொள்கிறார்கள்.

செஞ்சி வட்டார வளர்ச்சி

*** 174 வினா—திரு. ரா. ரா. முனுசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டார வளர்ச்சிக்காக 1967–68-ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) அதில் இதுவரைக்கும் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ரூ. 1,06,300.

(இ) ரூ. 95,299 (31—3—1968 வரையில்).

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, செஞ்சி வட்டம் மிகவும் பின்தங்கிய வட்டமாக இருக்கிறது. அதற்கு இப்போது செலவிடப்படுகின்ற தொகை போதாததாக இருப்பதால், வட்டாரத்தின் வளர்ச்சிக்கேற்றவாறு அதிகமாக நிதி ஒதுக்கித்தர அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: வட்டார வளர்ச்சிக்கென்று ஒதுக்கப்பட்ட தொகையை அந்தந்த வட்டாரங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறோம். மேலும் நிதிநிலை இடம் கொடுத்தால் அங்கத்தினரின் வேண்டுகோள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள்

***175 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏலகிரி மலை, ஜவ்வாது மலைப் பகுதிகளில் Tribal Blockகள் ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, பழங்குடி மக்களின் வளர்ச்சிக்காக வேண்டி, அவர்களுடைய முன்னேற்றத்திற்காக வேண்டி, டிரைபிள் பிளாக்குகளை அமைப்பதற்கு ஏற்படக்கூடிய செலவுத் தொகைகள் பூராவையும் மத்திய சர்க்கார் அளிக்கிறார்களா? அப்படி மத்திய சர்க்கார் அளித்தால், நம் மாநிலத்திலும் இதுபோன்ற பிளாக்குகளை அமைத்து அந்தப் பணத்தைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நான்காவது திட்டக் காலத்தில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலைப் பகுதிகளில் பழங்குடி மக்களின் வளர்ச்சிக்காக வட்டார பிளாக் அமைப்பதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்தது. ஆனால் 1967–68-ம் ஆண்டின் திட்டச் செலவு குறைக்கப்பட்டதன் காரணமாக இந்த ஒரு திட்டத்தையும் கைவிடுமாறு மத்திய அரசு அறிவித்துள்ளது.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, இதுபோன்ற பிளாக்குகளை ஏலகிரி பகுதியில் இருக்கக்கூடிய பழங்குடி மக்களுக்கும் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று மாவட்ட

ஆட்சித் தலைவர்கள் இந்த அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்களா ? அப்படியென்றால், இந்த அரசு என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அரிஜன நலத் துறையினரும் இந்தப் பரிந்துரைகளைச் செய்தார்கள். அந்தப் பகுதியில் இருக்கிற கிராமங்களை இணைத்து ஒரு தனி வட்டாரமாக ஆக்க வேண்டும் என்பது கோரிக்கையாகும். அப்படி இணைத்துவிட்டால் அங்கிருக்கக்கூடிய பழங்குடி மக்களின் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும் என்று சொல்லப்பட்டது. தற்போதைய நிலையில் ஒரு தனி வட்டாரமாக அமைக்கக்கூடிய சாத்தியக்கூறு இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. டி. அண்ணாமலை : தலைவர் அவர்களே, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, உயர்ந்த மலைகளாக இருப்பதால் அங்கே கோடை வாசஸ்தலம் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அங்குள்ள பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கே நிதி நிலை இல்லாத நேரத்தில் அவற்றை உல்லாச வாசஸ்தலமாக மாற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இருக்கிற சங்கடங்களைக் கனம் உறுப்பினர் அறிவார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : கல்வராயன் திட்டத்தை மேற்கொள்வதில் அங்குள்ள நிலங்கள் யாருக்குச் சொந்தம் என்று பழம்பெருங்குடி தலைவர்களால் போடப்பட்ட வழக்கு இருக்கிறதே, அதனால் இந்தத் திட்டம் நிறுத்திவைக்கப் பட்டிருக்கிறதா? அல்லது இந்திய அரசினரின் ஆணைக்கிணங்க நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 1967–68–ஆம் ஆண்டு நிதி நிலை வசதிக் குறைவினால் அதை எடுத்துக்கொள்ளவேண்டாமென்று இந்திய அரசாங்கம் நிறுத்திவைக்க கேட்டுக்கொண்டது. வழக்கு இருப்பது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : பழங்குடி மக்களுடைய வளர்ச்சிக்காக வேண்டி ஒரே ஒரு இடத்தில் ஏற்றுக்கொண்ட திட்டத்தையும் நிறுத்தச் சொல்லிவிட்டார்கள் என்றால் அந்தத் திட்டமே கைவிடப்பட்டுவிட்டதா ? அல்லது நமது மாநிலத்தில் மட்டும் விட்டுவிடச் சொல்லி உத்தரவு போட்டுவிட்டார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்த மாநிலத்திலேயே சேலத்தில் கொல்லி மலை, ஏற்காடு முதலிய இடங்களில் இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கல்ராயன் மலைத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதி வடிவம் எடுக்காததால் 1967–68 நிதி நிலையில் அதற்கு வசதியில்லை என்று சொல்லப்பட்டது.

One-unit system for post of Superintendent

* 155 Q.—Thiru A. M. RAJA,
Thiru N. S. V. CHITHAN,
Thiru K. CHEEMAICHAMY : } Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether the Secretariat Non-Gazetted Staff Association has represented that one-unit system should be brought into effect for the promotion of Assistants to the category of Superintendents ; and

(*b*) if so, the action taken thereon ?